**ஒதுக்கீட்டுத் தலைப்பு 143 - பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்ள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 மே 30 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) பந்தியின் பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 இலிருந்து 1.8 வரையான

பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 3,692,822 ஆக இருந்தது.

**1.4 கணக்களிப்பு பொறுப்பும் நல்லாளுகையும்**

**1.4.1 கூட்டிணைந்த திட்டம்**

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆண்டிற்காக மாத்திரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.4.2 உள்ளக கணக்காய்வு அறிக்கை**

உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக கணக்காய்வு சேவையிலுள்ள ஒரு பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் ஒரு பெண் கணக்கு உதவியாளர் இப்பிரிவின் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

**1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 22,704,944 ஆக இருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,762,502 தொகையான மீதி ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரியதாகும். அமைச்சு பதவியணிக்காக அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட அமைச்சு, திணைக்களம், கூட்டுத்தாபனம், சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களுக்கு அந்த அந்த அலுவலகங்களிலிருந்து செலுத்தப்படும் சம்பளம் அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு தீர்த்துவைத்தல் உரிய ஊழியர்களின் நிரந்தர அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட

வேண்டிய போதிலும் அந்நடவடிக்கைளின் தாமதத்தின் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

### 1.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **(i)** | **தாபன விதிக்கோவை** | | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5.1 ஆம் பிரிவு | 158,250 | கடனுக்காக அறவிடப்படும் மெத்த பணம் சம்பளத்தில் 40% இனை மிகைக்காதிருக்க வேண்டிய போதிலும் அந்த எல்லையை மிகைத்து கடன் வழங்கப்பட்டிருந்தது. |
| **(ii)** | **நிதிப்பிரமாணம்** | | |
| | நி.பி 371(2)(ஆ) | 837,000 | குறித்த பணிக்கான உப கட்டுநிதி எல்லையை மிகைத்து கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| | நி.பி 371(2) (இ) | 288,000 | உரிய பணி பூர்த்தி செய்யப்பட்ட உடன் உப கட்டுநிதி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | | |
| | 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 3 ஆம் பந்தி | 176,000 | சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் மீதி குழுவின்படி வகைப்படுத்தப்பட்டு பொழிப்பாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.7 முகாமைத்துவ பலவீனங்கள்

2003 ஆம் ஆண்டின் போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடன் அடிப்படையில் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் உறுப்பினர் பதவி இல்லாமல் போனதன் அடிப்படையில் அறவிடுதல் நடவடிக்கை உரிய முறையில் இடம்பெற்றிருக்கவில்லை. அதன்பின்னர் இந்த உறுப்பினர்களில் மூன்று பேர் இறந்திருந்ததுடன் அவர்களிடமிருந்து 2012 திசெம்பர் 31 வரை ரூபா 1,231,421 தொகையும் உறுப்பினர் பதவி இழந்ததன் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து ரூபா 299,605 தொகை அறவிடவேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 1.8 மனிதவளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 08 | 06 | 02 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 33 | 24 | 09 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 19 | 17 | 02 |
| | மொத்தம் | 63 | 48 | 15 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.